பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 09 2024 **TUESDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பத்ம விருதுகளுக்கு அதிக அளவில் தகுதியுள்ள நபர்களை வரும் 15ஆம் தேதிக்குள் பரிந்துரைக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. ஆராய்ச்சிகளுக்கான அரசின் நிதி பெற்றுள்ள பல்கலைக் கழகங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்

4. தமிழக மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஆசிய ஹாக்கிப் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியா 5-1 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

>>>>><<<<<

பத்ம விருதுகளுக்கு அதிக அளவில் தகுதியுள்ள நபர்களை வரும் 15ஆம் தேதிக்குள் பரிந்துரைக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இதுவரை பத்ம விருதுகளுக்காக பல பரிந்துரைகள் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் கடைக்கோடியில் சிறப்பாக பணியாற்றி வரும் நபர்களுக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்ம விருதுகள் பெற்றுள்ள அவர்களது வாழ்க்கை மிகவும் உத்வேகம் அளிக்கக்கூடியதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பத்ம விருதுகள் அளிப்பதில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்ற அடிப்படையில், மக்களிடமிருந்து பரிந்துரைகள் கேட்கப்படுவதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்த விருதுக்கு பரிந்துரைக்க விரும்புபவர்கள் **awards.gov.in** என்ற இணையதளம் வழியாக பரிந்துரைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் 54வது கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், புற்றுநோய் சிகிச்சை மருந்துக்கான சரக்கு மற்றும் சேவை வரி 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

ஆராய்ச்சிகளுக்கான அரசின் நிதி பெற்றுள்ள பல்கலைக் கழகங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுக் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் துறையில் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பது குறித்து அமைச்சர்கள் குழு அமைக்கப்படும் என்றும் இந்தக் குழு வரும் அக்டோபர் மாத இறுதிக்குள் அதன் அறிக்கையை தாக்கல் செய்யும் என்றும் இதுகுறித்து நவம்பர் மாதம் நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த 6 மாதங்களில் ஆன்லைன் விளையாட்டுகளின் வருமானம், ஆறாயிரத்து 909 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதற்கான சரக்கு மற்றும் சேவை வரி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கார் இருக்கைகளுக்கான ஜிஎஸ்டி வரி 18 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிவில் விமான போக்குவரத்து இயக்ககம் ஒப்புதல் அளித்துள்ள விமான பயிற்சிகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>><<<<<

காஸாவில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் கவலை அளிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ரியாதில் நடைபெற்ற இந்திய — வளைகுடா நாடுகளின் கூட்டமைப்புக் கூட்டத்தில் பேசிய அவர், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடைபெற்று வரும் சண்டையில், அப்பாவி மக்கள் கொல்லப்படுவது மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

அதேநேரத்தில் தீவிரவாதம் மற்றும் பொதுமக்களை பிணைக்கைதிகளாக பிடித்து வைப்பதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர அமைதி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வளைகுடா நாடுகள் சிறந்த ஒத்துழைப்பு அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா–வளைகுடா நாடுகளுக்கு இடையிலான கட்டுப்பாடில்லாத வர்த்தக உடன்பாடுகளுக்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அடுத்த ஐந்தாண்டுக்கான செயல் நடவடிக்கைகளுக்கு இந்தியா — வளைகுடா நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.

இதில், அறிவியல் மற்றும் கல்வித்துறை சார்ந்த ஒத்துழைப்புகள் மேம்படுத்தப்படும் என்றும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் விதத்திலும், இந்தப் பகுதியில் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் விதத்திலும் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளதாக வளைகுடா நாடுகளுக்கான பொதுச்செயலாளர் திரு. **Jasel Albudaiwi** குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற விநாயகர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் தொடர்ந்து கொலைகள் நடந்து வருவதாகவும், வீதிக்கு ஒரு டாஸ்மாக் கடையை அரசு திறந்து, மக்களை மதுவிற்கு அடிமையாக்கி வருவதாகவும் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல்.முருகன் 20 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் துறையில் உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செமிகான் இண்டியா 2024 மாநாடு நொய்டாவில் நாளை நடைபெறவுள்ளது.

'செமிகண்டரின் எதிர்காலத்தை வடிவமைப்போம்' என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், செமிகண்டக்டர் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

தெற்காசியாவில் மிகப் பெரிய கண்காட்சியாக நடைபெறும் மின்னணு கண்காட்சியுடன், இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த செமிகண்டக்டர் துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

இதில் 250 நிறுவனங்கள் தங்களது செமிகண்டக்டர் தொடர்பான கண்காட்சி அரங்குகளை அமைக்கவுள்ளன. செமிகண்டக்டர் துறையில் சிறந்து விளங்கும் 150 நிபுணர்கள் இந்த கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர்.

>>>>><<<<<

தமிழக மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதுரையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மாநில அளவில் 31 ஆயிரத்து 220 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு 2 ஆயிரத்து 874 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கும் திட்டத்தினை அவர் தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய அவர், தமிழகத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்டங்கள் அமல்படுத்தப்படுவதாக கூறினார்.

அரசு பள்ளிகளில் பயின்று, வெளிநாடுகளுக்கு உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவர்களின் முதல் பயணச் செலவு, முதல் ஆண்டுக்கான கட்டணம் ஆகியவற்றை தமிழக அரசே ஏற்கும் என்று சமீபத்தில் முதலமைச்சர் அறிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது, வங்கிகள் மூலமாக கடன் பெறும் மகளிர், மிகச் சிறந்த தொழில் முனைவோராக மாறுவதற்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>><<<<<

காவிரிக் கரை மற்றும் நீர்நிலைகளின் கரையோரங்களில் ஒரு கோடி பனைவிதைகள் நடும் பணியினை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், கொப்பம் ஏரியின் கரையோரங்களில் பனைவிதைகளை நடும் பணி நேற்று நடைபெற்றது.

பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் விதத்தில், தமிழகம் முழுவதும் பனை விதைகள் சேகரிக்கப்பட்டு, ஐந்து கட்டங்களாக பனைவிதைகள் நடும் பணி நடத்தப்படவுள்ளது.

எட்டு மாவட்டங்களில் காவிரி கரையின் இருபுறங்களிலும் சுமார் 416 கிலோமீட்டர் தொலைவுக்கு பனைவிதைகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணியில் நூற்றுக்கு மேற்பட்ட சுற்றுச்சூழல் அமைப்புகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடவுள்ளனர்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

வியட்நாமின் வடக்குப்பதியில் வீசிய **Yagi** புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் 59 பேர் உயிரிழந்தனர், 247 பேர் காணாமல் போயுள்ளனர்.

>>>>><<<<<

ஜெர்மனியின் எல்லை வழியாக அத்துமீறி உள்ளே நுழைபவர்களை தடுக்கும் விதத்தில் கடுமையான சோதனைகளை அந்நாட்டு அரசு செயல்படுத்தியுள்ளது.

>>>>><<<<<

மொரோக்கோ நாட்டில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக 18 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

தில்லியில் தொடர்ந்து காற்று மாசு ஏற்பட்டுள்ளதை அடுத்து, பட்டாசுகளை இருப்பில் வைப்பது, விற்பது மற்றும் வெடிப்பதற்கு அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேிவரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக தில்லி அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 603 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு 69 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை மாநில அமைச்சர்கள் திரு. பொன்முடி மற்றும் திரு. செஞ்சி மஸ்தான் ஆகியோர் வழங்கினர்.

>>>>><<<<<

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 789 கோடி ரூபாய் மதிப்பில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பராமரிக்கும் வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு முகாம் வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்று அம்மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய ஹாக்கிப் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியா 5-1 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

சீனாவின் **Hulunbuir**-ல் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியாவின் சுக்ஜித் சிங் இரண்டாவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். பின்னர் 60வது நிமிடத்தில் மற்றொரு கோலையும் அடித்தார்.

நடப்பு சாம்பியனான இந்திய அணி, ஏற்கனவே சீனாவை 3-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

நாளை நடைபெறும் போட்டியில், இந்தியா – மலேசிய அணியை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**